WWW.ASKNETWORK.NET

Tamil

/ASKING FOR NATIONS/

தேசங்களுக்காகக் கேட்டல்

"என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" என்று சங்கீதம் 2:8-ல் தேவன் சொல்லுகிறார். இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், கேட்பதற்கான இந்த அழைப்பை ஏற்க வேண்டும்.

கேளுங்கள், அப்பொழுதுஉங்களுக்குக்கொடுக்கப்படும்; தேடுங்கள்,அப்பொழுதுகண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுதுஉங்களுக்குத்திறக்கப்படும்.
மத்தேயு 7:7

தேசங்களுக்காகக் கேட்டல்

கேட்பது மிக முக்கியமானது. நாம் அடிக்கடி, தொடர்ந்து ஒரே நோக்கத்தோடு தேவனிடத்தில் கேட்க வேண்டும். எப்படியாயினும் நாம் கேட்க வேண்டும்! **கேட்கும்போது** நமக்குக் **கொடுக்கப்படும்** என்று இயேசு சொன்னார்.

தேசங்களுக்காகத் தேடுதல்

அதாவது, நாம் இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டும்; தேவனிடம் கேட்கும்போது தெளிவாகவும் குறிப்பிட்டும் கேட்க வேண்டும்; ஒருபோதும் சோர்ந்துபோகக்கூடாது. **தேடும்போது கண்டடைவோம்** என்று இயேசு சொன்னார்.

தேசங்களுக்காகத் தட்டுதல்

நாம் கேட்பதில் உறுதியாக இருந்து **தட்டும்** நிலைக்கு வரும்போது, அநேகத் தடைகளைத் தாண்டிச் செல்ல முடியும். இதைத்தான் இயேசு, **திறந்த வாசல்** என்று விவரிக்கிறார்.

தேசங்களுக்காக நீங்கள் செய்யும் ஜெபத்தின் மூலம் என்னென்ன காரியங்கள் நடக்க வேண்டும் என்பதைப் பற்றிய தரிசனத்தைத் தரும்படி தேவனிடம் கேளுங்கள்.

இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். வெளிப்படுத்தின விசேஷம் 7:9

தேசங்களுக்காக தேவனுடைய அன்பையும் இரக்கத்தையும் உங்களுக்குத் தரும்படி அவரிடம் கேளுங்கள்.

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16

தேசங்களுக்காகப் பெரிய காரியங்களைக் கேளுங்கள்.

நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு மகிமை உண்டாவதாக. எபேசியர் 3:20

தேசங்களுக்காகஎவ்வாறு**கேட்கலாம், தேடலாம், தட்டலாம்**என்பதை அறிந்துகொள்ள பின்பக்கத்தைத் திருப்பிப் பார்க்கவும்.

கேட்பது தேவனுடை யராஜ்யம்வரு வதற்குவழிவகுக்கிறது எப்படி தேசங்களுக்காக கேட்பது ... தேடுவது ... தட்டுவது

வெவ்வேறு தேசங்களுக்காக ஜெபிக்க, **குறிப்பிட்ட வேதவசனங்களை உங்களுக்குக் காண்பிக்கும்படி** தேவனிடம் கேளுங்கள்.
சங்கீதம் 119:130

செய்திகளைப் கவனித்து, தலைப்புச் செய்திகளில் இடம்பெறும் தேசங்களுக்காக ஜெபியுங்கள்.
1 நாளாகமம் 12:32

உங்களுக்குள்ள தொடர்புகளைப் பயன்படுத்துங்கள். ஒரு தேசத்தில் வசிக்கிற அல்லது ஊழியம் செய்கிற நண்பர்கள் உங்களுக்கு இருந்தால், முதலில் அவர்களுக்காகவும் அந்தத் தேசத்திற்காகவும் ஜெபியுங்கள்.
எபேசியர் 6:18–19

ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் ஜெபம் தேவைப்படும் தேசங்களை உங்கள் இருதயத்தில் பாரமாக உணர்த்தும்படி **தேவனிடம் கேளுங்கள்**.
தானியேல் 2:22

இன்னும் **சந்திக்கப்படாத** மக்கள் கூட்டங்களில் கவனம் செலுத்தி, அவர்களிடம் சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல ஊழியர்களை அனுப்பும்படி தேவனிடம் கேளுங்கள். ஏசாயா 45:22–23

தேசங்கள் விடுதலையடைய **உபவாசத்தோடு ஜெபியுங்கள்**. ஏசாயா 58:5

தேவையான தகவல்களைத் திரட்டுங்கள். அந்தத் தேசத்தைப் பற்றி உங்களால் முடிந்த அனைத்தையும் அறிந்துகொள்ளுங்கள். (தகவல்களுக்கு www.ASKNetwork.net என்ற வலைதளத்தைப் பார்க்கவும்.) நீதிமொழிகள் 2:1–6

உங்களோடு இணைந்து ஜெபிக்கவும், உங்கள் தரிசனத்தைப் பகிர்ந்துகொள்ளவும் **மற்றவர்களை அழையுங்கள்**. மத்தேயு 18:19–20

தேசங்களுக்காக ஜெபிக்கும்போது, அந்தந்த தேசங்களில் **பரிந்துபேசும் ஜெப வீரர்களை எழுப்பும்படியும்**, அங்கு ஆஸ்க் வலையமைப்பை ஏற்படுத்தவும் ஆண்டவரிடம் கேளுங்கள். லூக்கா 10:2

தேசங்களின் **வரைபடங்களை** வைத்து ஜெபியுங்கள். ஜெபிக்கும்போதே **பாடல்களைப் பாடி, தேவனை ஆராதியுங்கள்**. ஆதியாகமம் 13:17

ஆண்டவருடைய நாமங்களையும், தேசங்களை ஆளுகை செய்யும் உரிமை அவருக்கே உண்டு என்பதையும் **அறிவியுங்கள்**. 1 சாமுவேல் 17:45
(ஆண்டவருடைய நாமங்களின் பட்டியலை www.ASKNetwork.net என்ற வலைதளத்தில் காணலாம்.)

தேசங்களுக்குச் சென்று ஜெபிக்கவும், மக்களை நேசிக்கவும், சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பளிக்கும்படி தேவனிடம் கேளுங்கள்.
மத்தேயு 28:19

மிஷனரிபயணங்களுக்குச் **செல்கிறவர்களுக்காக ஜெபிக்க அர்ப்பணியுங்கள்**. எபேசியர் 1:15–17

உங்கள் ஊழிய தரிசனத்தை விரிவாக்கும்படி கர்த்தரிடம் கேளுங்கள். அதை எளிதாகக் காத்துக் கொள்ளுங்கள்!

"ஒருவர் தேவனுக்காகவும் மனிதர்களுக்காகவும் செய்யக்கூடிய மிகப்பெரிய காரியம் ஜெபம். ஜெபம் மட்டும் செய்து கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல. ஆனால், எல்லாவற்றிலும் முதன்மையான காரியம் ஜெபமே." எஸ். டி. கார்டன்

தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜாதியிலிருந்தும் அவருக்குப் பயந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனை அவர் ஏற்றுக்கொள்ளுகிறாரென்றும் இப்பொழுது மெய்யாகவே அறிந்திருக்கிறேன். அப்போஸ்தலர் 10:34–35